ஓம் கிரியா பாபாஜி நம ஔம்

# பாபாஜியின் கிரியா யோக அமைப்பினால் வழங்கப்படும் தமிழ் மொழிமூலமான வெளியீடுகளும், பெங்களூர் ஆசிரமத்தின் தற்போதைய புதிய விருந்தினர் இல்லமும்.

## “தமிழ் யோக சித்தர் ஓலைச்சுவடிப் பொக்கிஷம்”

**Rs. 300.00**

## புதிய வரவு




“தமிழ் யோக சித்தர் ஓலைச்சுவடிப் பொக்கிஷம்” என்னும் இந்த நூல் இடைச்சங்க காலத்தில் தமிழ் யோக சித்தர்கள் இயற்றிய நூற்றுக்கணக்கான பாடல்களுக்கு ஒரு வழிகாட்டியாகும். ஓலைச்சுவடிகளில் காணப்பட்ட இப்பாடல்களை வல்லுனர்களும் அறிஞர்களும் கொண்ட ஒரு குழு சேகரித்து, படியுரு எடுத்துத் தற்காலத் தமிழில் எழுத்துப் பெயர்த்து அதனைத் திருத்தியுள்ளனர். இந்த வழிகாட்டி சித்தர் பாடல்களில் விருப்பமுள்ளவர்களுக்கும் ஒரு அரிய பொக்கிஷமாகும்.

1,677 பக்கங்களில் 13,276 பாடல்களைக் கொண்ட குறுந்தகடு இந்நூலின் பின் அட்டையில் இணைக்கப்பட்டுள்ளது.

சித்தர் பாடல்கள் தொகுப்பைப் படிப்பவர்கள் ஒவ்வொரு பாடலின் பொருளையும் எளிதாக அறிவதற்கு பேராசிரியர் முனைவர் T.N.பிரணதார்த்திஹரன் அவர்கள் ஒவ்வொரு பாடலின் சாரத்தையும் ஒரு சுருக்கமான முன்னுரையையும் அளித்துள்ளார். அவர் தற்போது தமிழ்நாட்டில் மஞ்சங்குடியிலுள்ள சுவாமி தயானந்தா அறிவியல் மற்றும் கலைக்கல்லூரியின் முதல்வராக உள்ளார். இதற்கு முன் அவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் தமிழ் ஆராச்சி மையத்தின் தலைவராகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். கடந்த 37 வருடங்களாக அவர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் ரமணஒளி என்ற பத்திரிக்கையின் பதிப்பாளராகப் பணியாற்றி வருகிறார். 38 நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மற்றும் சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்த அனுபவமும் எம்.ஏ (தமிழ்), எம்.ஏ (ஆங்கிலம்), எம்.ஏ மற்றும் முனைவர் (தத்துவம்) ஆகிய பட்டங்களையும் பெற்ற பேராசிரியர் முனைவர் T.N. பிரணதார்த்திஹரன் அவர்கள் இந்தப் பாடல்களுக்கு விளக்கவுரை எழுதுவதற்குத் தகுதிவாய்ந்தவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

தமிழ் யோக சித்தர்களின் யோகம் சார்ந்த (மருத்துவமல்லாத) பாடல்களைத் தென்னிந்தியாவிலுள்ள பல நூலகங்களிலிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் பெற்று அவற்றை கணினியில் படிப்பதற்கு ஏற்ற விதத்தில் மாற்றி அவற்றை அழியாமல் பாதுகாக்கும் இந்த முயற்சிக்குத் தலைமை தாங்கிய யோக சித்தர் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் பேராசிரியர் முனைவர் T.N. கணபதி அவர்கள் இந்த நூலைத் தொகுத்ததுடன் இதற்கு விரிவான முகவுரையையும் எழுதியுள்ளார். ஓலைச்சுவடியில் உள்ள விஷயங்களை விளக்க, பல இடங்களில் கூடுதலாகச் சில குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிக்குப் பொருளுதவி செய்த, திரு மார்ஷல் கோவிந்தன் சச்சிதானந்தா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பாபாஜியின் கிரியா யோக ஆச்சாரியர்கள் அறக்கட்டளை அமைப்பு மற்றும் இந்த ஆய்வு முயற்சியில் ஈடுபட்ட வல்லுனர்களின் எட்டாவது வெளியீடு இது.

## பாபாஜியின் தெய்வீகக் குரல்: கிரியா யோகத்தைப் பற்றிய மூன்று பேருரைகள்

திரு. வி.டி. நீலகண்டன், எஸ்.எ.எ.இராமையா, சத்குரு கிரியா பாபாஜி நாகராஜ்

**Rs. 750.00**




"பாபாஜியின் தெய்வீகக் குரல், தெய்வீக ரகசியங்களின் வெளிப்பாடு மற்றும் எல்லாத் தொல்லைகளையும் நீக்கும் சிறப்புத் திறவுகோல் என்ற இம்மறுபதிப்பு, நம்மிடையே வாழும் தலைசிறந்த ஆன்மீகக் குருக்களில் ஒருவரது மிக ஆழ்ந்த முக்கியப் பேருரைகளாகும். இதன் ஆசிரியர் சத்குரு கிரியா பாபாஜி நாகராஜ் அவர்கள் இந்நூல்கள் மிகுந்த ஊக்கத்தை அளிப்பனவாகவும் கிரியா யோகத்தின் இலக்கான: வேற்றுமையில் ஒற்றுமை, உலக அமைதி மற்றும் இறைவனை அறிதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவுவனவாகவும் இருக்கும் என்று முன்னமே கூறியுள்ளார். வாழ்க்கையில் உயர விரும்புபவர்களுக்கு இந்த ரத்தினங்கள் பெரும் ஊக்கத்தை அளிக்கும்.

கி.பி.1952 மற்றும் கி.பி. 1953 ஆண்டுகளில் பாபாஜி, பத்திரிக்கையாளரும் மெய்யுணர்வாளருமான தனது "அன்புக்குழந்தை" திரு. வி.டி. நீலகண்டன் அவர்களுக்கு முன், இரவுகளில் தோன்றினார். திரு நீலகண்டன் மற்றும் அவரது மறுபாதியான யோகி எஸ்.எ.எ.இராமையா அவர்களிடமும் பாபாஜி, தனது உபதேசங்களைப் பதிவு செய்யவேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். அது பிற்காலத்தில் கிரியா யோகாவின் மலர்ச்சிக்கு வித்திடும் என்றும் இவ்வுபதேசங்கள் புத்தகவடிவில் உலகெங்கும் கிரியா யோகத்தைப் பரப்பும் என்றும் அவர் கூறினார். பாபாஜி, இந்நூல்களை ஒரு வார்த்தைவிடாமல் இவற்றை எழுத்து வடிவில் கொண்டுவந்த திரு. நீலகண்டன் அவர்களுக்கு அர்ப்பணித்துள்ளார்.

இப்புத்தகங்கள் காலத்தால் அழியாத உண்மைகளை செயல்முறைப்படுத்தவும் பாபாஜியின் அறிவியல் பூர்வமான இறைவன்- உண்மை ஆகியவற்றின் ஒருமைப்பாட்டைக் காட்டும் கிரியா யோகத்தை அறிந்துகொள்வதற்கும் தூண்டுகோலாய் அமையும். (456 பக்கங்கள் )

## பாபாஜியும் 18 சித்தர்களின் கிரியாயோக சம்பிரதாயமும்




**எம். கோவிந்தன் Rs. 350.00**

பரமஹம்ச யோகானந்தரின் ஒரு யோகியின் சுயசரிதை என்ற அழியாப்புகழ் பெற்ற நூலின் மூலம் உலகுக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட பாபாஜியின் வாழ்க்கை வரலாறு. பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் முக்திநிலையையும் தெய்வீக மாற்றத்தையும் அடைந்த பாபாஜி, இன்றும் பத்ரிநாத் அருகில் பதினாறு வயது இளைஞராக வாழ்கிறார். தமிழகத்தில் புகழ்பெற்ற பதினெட்டு சித்தர்கள் பரம்பரையைச் சார்ந்த அகத்தியரும் போகநாதரும் அவருக்கு கிரியா யோக தீட்சை அளித்தனர். நீண்ட காலமாக அவரது சிஷ்யராக

இருக்கும் ஒருவர் இந்த அரிய நூலின் மூலம் இதுவரை வெளிவராத சில புதிய தகவல்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் பழங்கால பழக்கவழக்கங்கள் மற்றும் தற்கால இலக்குகளையும், கிரியா யோகா எவ்வாறு உலக வாழ்க்கையையும் ஆன்மீகத் தேடலையும் ஒன்று சேர்க்கிறது என்பதையும் நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். கிரியா யோகத்தின் மனம் மற்றும் உடல்சார்ந்த விளைவுகளை விரிவாக விளக்கும் இந்நூல், யோகசாதனைகளுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. இதில் சித்தர் பாடல்களும் அவற்றின் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இப்புத்தகம் உங்களுக்கு ஊக்கத்தை அளிக்கும். தற்போது தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் கிடைக்கும் இந்நூல் விரைவில் மராத்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளது. (288 பக்கங்கள்)

## “பதஞ்சலியில் கிரியா யோக சூத்திரங்கள்”

**எம். கோவிந்தன் Rs. 350.00**




பதஞ்சலியின் யோக சூத்திரம் என்னும் நூல் யோகசாதனையின் முக்கிய நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பதஞ்சலி தமது யோக முறையை “கிரியா யோகம்: விழிப்புணர்வுடன்கூடிய கர்ம யோகம்” என்று அழைக்கிறார். இதுவரை இந்நூலுக்கு விளக்கமளித்துள்ளோர் இதை ஒரு தத்துவநூலாகவே கருதியுள்ளனர். யோக சாதனைகளில் இதன் தாக்கத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை. அவர்கள், இந்த நூல் பல மறைபொருட்களைக் கொண்டிருப்பதையும் தீட்சை பெற்ற முன்னனுபவம் உடையவர்களே இதன் ஆழ்பொருளை அறிந்துகொள்ள முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ளவில்லை. இப்பொழுது உங்கள் முன் உள்ள இந்த புதிய மொழிப்பெயர்ப்பும் விளக்கவுரையும் தன்னை அறிவதற்கும் மெய்யுணர்வு பெறுவதற்கும் உங்களுக்கு வழிகாட்டியாக உதவும். பதஞ்சலியின் ஆழ்ந்த தத்துவ உபதேசங்களை எவ்வாறு வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் கடைப்பிடிப்பது என்பதை விளக்கும் இந்நூல், ஒவ்வொரு சூத்திரத்தை அடுத்து ஒரு பயிற்சிப் பகுதியையும் கொண்டுள்ளது. கிரியா யோகத்தைப் பயிலுவது ஒரு சக்தி மிகுந்த வாகனத்தை ஓட்டுவதைப் போன்றது. சரியான வரைபடமில்லாவிட்டால் பல மாணவர்கள் போக்குவரத்தின் நெரிசலிலோ முட்டுச்சந்திலோ மாட்டிக்கொள்ள வேண்டியதுதான். இப்பொழுது முதன்முறையாக ஒரு தெளிவான வரைபடம், இலக்குகள் குறிக்கப்பட்டு, மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

“எம். கோவிந்தன் அவர்கள் எழுதியுள்ள பதஞ்சலியின் கிரியா யோக சூத்திரம் என்ற இந்த நூல், யோகத்தைப் பற்றிப் பொதுவாக அறிந்துகொள்வதற்கும் யோகசூத்திரங்களைப் பற்றித் தெளிவதற்கும் மிகச் சிறந்த நூலாகும். நான் இதை மனப்பூர்வமாகப் பரிந்துரை செய்கிறேன். உலகம் முழுவதுமுள்ள யோக மாணாக்கர்கள் இதனைப் படித்துப் பெரிதும் பயன் பெறுவர், இவர் கூறியுள்ள வழிகள் மறுக்கமுடியாதவை என்பதை உணருவர்.” திரு. ஜார்ஜ் பியூர்ச்டீன், பி.எச்.டி. ஆசிரியர், பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் மற்றும் யோக கலைக்களஞ்சியம் (encyclopedia). (272 பக்கங்கள்)

KYP

# பாபாஜியின் கிரியா ஹடயோகம்

**எம். கோவிந்தன்   Rs. 100.00**




ஆயிரக்கணக்கான யோகாசனங்களிலிருந்து பாபாஜியால் இந்த 18 ஆசனங்கள், உடலுக்குப் புத்துணர்ச்சியூட்டி அவரது கிரியா யோகத்தின் நுண்ணிய நிலைகளுக்கு ஒருவரைத் தயார்ப்படுத்தும் வழிமுறையாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. சாகாவரம் பெற்று இமயத்தில் வாழும் குருவே இவற்றின் செயல் திறனுக்குச் சான்று. ஒவ்வொரு ஆசனமும் பல நிலைகளாக, தொடக்க நிலையிலுள்ள மாணவர்களுக்கும் தேர்ச்சி பெற்ற மாணவர் களுக்கும் பொருந்தும் வகையில் அளிக்கப் பட்டுள்ளது. இந்த ஆசனங்கள் ஜோடிகளாக, அதாவது, ஒரு ஆசனம் அதன் எதிர்நிலை ஆசனம் இவற்றுக்கிடையே ஒரு ஒய்வு நேரம் ஆகியவற்றைக் கொண்டதாக, விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஒரு கையேடு வடிவத்தில் ஒரு ஆசனத்தின் ஒவ்வொரு நிலையும் ஒரு வரைபடத்துடனும் எளிய விளக்கத்துடனும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆசனத்தின் பயன்களும் அதனால் தீரும் நோய்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆசனங்களை மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை இந்நூலின் முன்னுரை விளக்குகிறது (32 பக்கங்கள்)

# பாபாஜியின் கிரியா யோக அருட்பாடத் திரட்டு அஞ்சல்வழிக் கல்வி

(ஆண்டுக் கட்டணம் ரூ 1,008/-) (18-24 பக்கங்கள் 12-மாதாந்தர வெளியீடுகள்) இந்தியாவிற்குள்- அஞ்சல் கட்டணம் இதில் அடங்கியுள்ளது.



கிரியா யோகத்தில் தீட்சை பெற்ற மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் யோகக் கொள்கைகள் மற்றும் அதன் பயிற்சி முறைகள் பற்றி ஆழமாக அறிந்து கொள்ள ஒரு மாதாந்தர அஞ்சல் வழிக் கல்வியை பாபாஜியின் கிரியா யோகா மையம் வழங்குகின்றது. யோகப் பயிற்சிகளைப் பற்றிய நமது கண்ணோட்டத்தை ஸ்தூல நிலை, மனோநிலை, சக்திநிலை மற்றும் ஆன்மநிலை போன்ற அனைத்து நிலைகளிலும் விரிவடையச் செய்யும் வகையில் இப்பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சரியான சங்கல்ப சக்தியினால் உங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைக்கும் முறையை இது அறிமுகப்படுத்துகின்றது. பாபாஜியின் கிரியா யோகப் பயிற்சிகளினால் நாம் மட்டுமன்றி நமது குடும்பங்களும் நண்பர்களும், ஏன், உலகமே எவ்வாறு நன்மை பெறுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள இப்பயிற்சி உதவுகின்றது. நமது ஹடயோகப் பயிற்சிகள், பிராணாயாமம், தியானம், மந்திர ஜபம் முதலியவை நம்மை நமது ஆத்மாவை நோக்கி அழைத்துச் செல்கின்றன. அன்பையும், இறையருளையும் பகிர்ந்துகொள்ளத் துவங்க, இப்பயிற்சி ஒரு கருவியாகச் செயல்படுகின்றது.

KYP

ஒரு வருடத்திற்கு நீங்கள் மாதந்தோரும் 18-24 பக்கங்களுள்ள ஒரு கருப்பொருளைப் பற்றிய பாடத்தை அஞ்சலில் பெறுவீர்கள். ஒவ்வொரு பாடமும் அடுத்ததற்கான முன்னோடியாய் அமையும். பாடங்களின் விவரங்கள் பின்வருமாறு:

1. இறையருள்
2. உறவுகள்: ஆன்மீக யாத்திரையில் அனைவருடனும் நற்பயணம்
3. மனத்தின் சக்தி
4. உணர்ச்சிகளைக் கையாள்வது
5. பிராணனின் சூட்சுமங்கள்
6. தியானப் பயிற்சி
7. விழிப்புணர்வு: உண்மையில் நம்மிடம் இருப்பது இது ஒன்று மட்டுமே
8. திடமான முறைகள், திட்பமான முடிவுகள்
9. இயமங்கள்: யோகத்தின் ஒழுக்கக் கடைப்பிடிப்புக்கள்
10. பகுத்தறிவினால் பதப்படுத்தப்பட்டதைக் கடப்பது
11. தவம்: நமது பயிற்சிகளில் ஒரு தீவிரத்தைக் கொண்டுவருவது
12. கிரியா யோகா: ஒரு குரு-யோக பரம்பரை

**குறிப்பு: இரண்டாம் வருட பாடங்கள் இன்னும் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை.**

.

நாங்கள் உங்களை இந்த சுய தேடல், கண்டுபிடிப்பு என்ற சாகசப் பயணத்திற்கு வரவேற்கின்றோம். இப்பயிற்சியை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் தொடங்கலாம். இப்பயிற்சியின் ஒரு பகுதியாக உங்களது கேள்விகள், கருத்துக்கள் மற்றும் உள்ளுணர்வுகள் ஆகியவற்றை kriyanandamayi@babajiskriyayoga.net என்ற முகவரிக்கு அனுப்ப ஊக்குவிக்கின்றோம்.

## கிரியா யோகம்: பாதையில் புலப்பட்டவை

மார்ஷல் கோவிந்தன், ஜேன் துர்கா அஹ்லுண்ட் **Rs. 325.00**




எதற்காக கிரியா யோகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும், அவற்றில் உள்ள கஷ்டங்கள் எவை, அவற்றை எவ்வாறு கடப்பது என்பது போன்ற வி'யங்களை இந்த யோகப்பாதையில் பயணிப்பவர்களுக்கும் அவற்றில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கும் விளக்கும் ஒரு புத்தகம் தேவை என்று பலவருடங்களாக எனது மனைவி ஜேன் துர்கா அஹ்லுன்ட்டும் நானும் உணர்ந்திருந்தோம். கிரியா யோகத்தில் உள்ள சவால்களையும் வாய்ப்புக்களையும் சந்திக்க இப்புத்தகம் ஒவ்வோருவருக்கும் உதவும் என்று நம்புகிறோம். நமது இயற்கைத்தன்மை தோற்றுவிக்கும் தடைகளை, நமது உண்மையான அடையாளம் என்ன என்பதை அறியாமையை, நமது கர்மா, நமது பழக்கங்கள் சொற்கள் செயல்கள் ஆகியவை தோற்றுவிக்கும் நடத்தைகளை நாம் ஒவ்வோருவரும் சந்திக்கிறோம். இறைவனைக் குறித்த விருப்பத்தை ஏற்படுத்திக்கொள்வது, அகங்காரத்தையும் அதன் மாறுபாடுகளையும் ஒழிப்பது, நமது உயர் இருப்பிடம் சரணடைவது, தூய சாட்சிநிலையில் இருப்பது ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதன் மூலம் நமது பாதையில் உள்ள எண்ணற்ற தடைகளையும் நமது கர்மத்தையும் வெல்லலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்கு நமக்கு வழியில் ஒரு தாங்கி, உள்நோக்கு தேவைப்படுகிறது. (184 பக்கங்கள்)

# திருமந்திரம் 2ம் பதிப்பு

**Rs. 5000.00**




திருமந்திரம் புதிய **ஆங்கில மொழிப் பதிப்பானது** ஒவ்வொரு செய்யுளுக்குமான மிகத் துல்லியமான மொழி பெயர்ப்பினையும் 3770 பக்கங்களுடன் 5 தொகுதிகளாக கடினமான அட்டை பொருத்திய நூல்களாக வெளியிடப்பட்டுள்ளது. பேராசிரியர் முனைவர் T.N. கணபதி தலைமையிலான 6 சிறந்த தமிழ் அறிஞர்களினால் ஒவ்வொரு செய்யுளும் **அதன் அசல் மொழியான தமிழ் மொழி படிவத்தினையும், ரோமன் எழுத்து ஒலி பெயர்ப்பினையும் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் ஒவ்வொரு செய்யுள்களையும் தெளிவாக்குவதற்கு கருத்துள்ள வர்ணனையுடன் இப் பதிப்பு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.** இந்தக் கடைசிப் பதிப்பிலே சைவசித்தாந்தத் தத்துவத்தின் இரு தொகுதிகளில் இருந்து அறிவொளி சொற்பொழிவுகள் அடங்கிய அருஞ்சொற்பொருள், விபரத்தொகுப்பு மற்றும் குறியீடுகள் அடங்கிய ஒரு அத்தியாயமும் சேர்க்கப் பட்டுள்ளது.



ஆன்மீக ஞானம் மற்றும் தத்துவவியல் ஆகியவற்றில் அழகான செய்யுள் வடிவிலே அளித்த சித்தர் திருமூலரின் திருமந்திரமானது ஒரு புனிதமான நினைவுச்சின்னமாக திகழ்கின்றது. இந்தப் பரந்த கலைக் களஞ்சியமானது சுமார் 2000 ஆண்டுக்கு முன்பு எழுதப்பட்டது. இது மிகவும் வியத்தகு பார்வையைக் கொண்ட ஒரு சாஸ்திரமாகவும் இந்தியாவின் மிகப் பெரிய நூல்களில் ஒன்றாகவும் ஓர் ஆன்மீக பொக்கிஷப் புதையலாகவும் திகழ்கின்றது. யோகம், தந்திரம், மற்றும் சைவசித்தாந்தம் ஆகிய பல்வேறு அம்சங்களை தமிழ் மொழியிலே முதன் முதலாக ஆய்வுக்கட்டுரையாக தந்த திருமந்திரமானது ஓர் வீரரின் சாகசமாக அமைகின்றது. தந்திரங்கள் எனப்படும் 9 அத்தியாயங்கள் கொண்ட 3000க்கும் அதிகமான செய்யுள்களை தனித்தனியாக மொழி பெயர்ப்பு செய்வதற்கும் அதற்குரிய விரிவான விளக்கவுரைகள் எழுதுவதற்கும் அறிஞர்கள் குழுவிற்கு கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் எடுத்தன. இந்த உன்னதமான உரையானது 5 தொகுதிகள் கொண்டது. ஒவ்வொரு தொகுதியும் இரண்டு தந்திரங்களையும் மற்றும் ஒவ்வொரு செய்யுளும் அதன் அசல் மொழியான தமிழ் மொழி படிவத்தினையும், ரோமன் எழுத்து ஒலிபெயர்ப்பினையும் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் ஒவ்வொரு செய்யுள்களையும் தெளிவாக்குவதற்கு கருத்துள்ள வர்ணனைகளையும் உள்ளடக்கியுள்ளது. இது மொத்தமாக 3770 பக்கங்களை கொண்டுள்ளது.

உள்ளார்ந்த அனுபவங்களை வெளிப்படுத்தும் சொற்கள் நிறைந்ததாக திருமூலரின் பாடல்கள் அமைந்துள்ளது. சித்தர்களின் குறியீட்டு மறை மொழியானது துல்லியம், செறிவு, இரகசியம், மர்மம், ஆச்சரியம் என்ற முக்கியமான அம்சங்களையும் குறியீடுகளையும் சித்தர்கள் கையில் வெளிப்படுத்தமுடியாத ஒரு கலை வெளிப்பாட்டு வடிவமாக விளங்குகின்றது. இந்தக் குறியீட்டு மொழியானது வெறுமனே அறியாமையினால் இதன் புனிதத்துவத்தை அழிப்பதிலிருந்து பாதுகாப்பதோடு மட்டுமல்லாது உயர்நிலை ஆன்மீக அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு செறிந்த மொழியாகவும் பயன்படுகிறது. உண்மையில் இந்த மொழியானது ஒரு உடைந்த விளக்கைப் போன்றது. சூபி சொல்லியலின்படி எமது ஆன்மீக அனுபவத்தின் உள் அர்த்தத்தை தெரிவிப்பதற்கு பயன்படுத்தப்படும் வழக்கமான மொழியானது ஒரு அன்பிற்குரியவருக்கு முத்தத்தை தூதர் மூலமாக அனுப்புவது போன்றது. சுருக்கமாக கூறின் இந்த சித்தர்களின் மறை மொழியானது இயற்கையில் ஆழ்ந்த ஆன்மீக, தெய்வீக ஒளியுடைய இருத்தலியலின் வெளிப்பாட்டின் சாரத்தையே அவர்களுடைய செய்தியை புரிந்து கொள்ளும் ஒருவர் அனுபவிக்கிறார். “விழிப்புணர்வுடன் திருமறை சார்ந்து மற்றும் மொத்த சமய மற்றும் தத்துவ அமைப்புக்களை அதனுள் உட்புகுத்தி வாசித்து ஆழ்ந்த தியான நிலையினுள் சென்று இந்த

KYP

செய்யுள்களை தியானிப்பதன் மூலமாக அதனுடைய உயரிய அர்த்தத்தினை புரிந்து கொள்ளுதலே இந்த மறை மொழியை புரிந்து கொள்வதற்கு எதிர்கொள்ளப்படும் மிகப்பெரிய சவால்களின் திறவுகோலாக அமைகின்றன.” (பேராசிரியர் முனைவர் T.N. கணபதி அவர்களின் The Yoga Of Boganathar, தொகுதி-1, 12ம் பக்கத்தில் இருந்து ). மேற்கூறிய விடயங்களை வாசகர்களை செயற்படுத்தத் தூண்டுவதே இந்தப் புதிய மொழிபெயர்பு மற்றும் வர்ணனையின் குறிக்கோளாகும்.

ஹவாயை சேர்ந்த மறைந்த சுவாமி சுப்ரமணியம் மற்றும் திரு.T.N. அருணாச்சலம் ஆகியோரின், சைவசித்தாந்தத்தில் திருமூலரின் பொருண்மைவாத இறையியல் மற்றும் மெய்கண்டாரின் பன்முகவாத மரபுத்திரிபின்மை ஆகிய இரு பக்க விவாதமடங்கிய அறிவெளி சொற்பொழிவுகள் இதனுடைய கடைசி தொகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மொழிபெயர்ப்பு மற்றும் வர்ணனையானது பக்கச்சார்பினை தவிர்த்து அவர்களது பின்னணியை பொருட்படுத்தாமல் அனைவரும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஓடர் செய்வதற்கு இந்த ஷாப்பிங் வண்டி முறையை உபயோகித்தல் சிறந்த வழி ஆகும்.

## ஓடர் தொடர்பான தகவல்கள்

தொலைபேசி அழைப்பு மூலம் ஓடர் செய்வதற்கு **(080) 23560252**,

மின்னஞ்சல் மூலம் ஓடர் செய்வதற்கு : info@babajiskriyayoga.in

அஞ்சல் மூலம் ஓடர் செய்வதற்கு, பாபாஜியின் கிரியா யோகா அமைப்பு, த.பெ 5608, மல்லேஸ்வரம் மேற்கு, பெங்களூர் 560 055 ற்கு உங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கத்துடன் நீங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் உருப்படியையும் (நூல்) எழுதி அனுப்பவும்.

நீங்கள் தெரிவு செய்த உருப்படியின் மொத்தப் பெறுமதியுடன் கப்பல் கட்டணங்கள் உள்ளடங்கலாக தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது அஞ்சல் மூலமாக உங்களுக்கு தகவல் கிடைக்கப்பெறும்.

**எப்படி கட்டணம் செலுத்துவது:** பெங்களூரில் செலுத்தக்கூடிய வகையில், கேள்வி வரைவு (demand draft) வங்கிக் காசோலை அல்லது தபால் பண அஞ்சல் (postal money order) மூலமாக பாபாஜியின் கிரியா யோக அமைப்பு என்ற பெயரிற்கு வரைந்து மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு உங்களுடைய கட்டணங்களை அனுப்பவும். வங்கிப்பரிமாற்றம் மூலமும் நீங்கள் கட்டணம் செலுத்தலாம்.

**வங்கிக்கணக்கின் பெயர்** : **பாபாஜியின் கிரியா யோக ட்ரஸ்ட் (Babajis Kriya Yoga trust)**
**வங்கியின் பெயர்** : **பஞ்சாப் தேசிய வங்கி (Punjab National Bank)**
**வங்கிக் கிளையின் பெயர்** : **செொன். பீட்டாஸ் பொன்டிபிக்சல் செமினறி மல்லேஸ்வரம் மேற்கு. (St. Peters Pontifical Seminary Malleshwaram West)**

**கணக்கு வகை** : **சேமிப்புக் கணக்கு**
**கணக்கு இலக்கம்** : **126 10 10 1000 544 76**
**RTGS / NEFT IFSC குறியீடு** : **PUNB 046 2500**

# “புதிய விருந்தினர் இல்லம்”

பெங்களூர் ஆச்சிரமத்தின் புதிய விருந்தினர் இல்லத்தில் தங்குமிட வசதி வழங்குவதை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். இந்த இடமானது இரு அறைகளையும் சமையலறை மற்றும் கழிவறை, காற்றாடி வசதி, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கி மற்றும் நீர் சூடாக்கி மற்றும் விசாலமான முற்றத்தையும் கொண்டமைந்துள்ளது. இது பெங்களூர் மல்லேஸ்வரத்தில் அமைதியான குடியிருப்பு பகுதியிலும், ஷாப்பிங் பகுதிகள், கோயில்களில் இருந்து 15 நிமிட நடை தூரத்தில் உள்ள சம்பிகி வீதியில் அமைந்துள்ளது.

யோகம் மற்றும் தியானப்பயிற்சிகள் செய்வதற்கு ஏற்ற விதத்தில் சிறந்த சுற்றுச் சூழலைக் கொண்டமைந்ததாகவும் ஆசிரம வசதிகளை இலகுவாக அணுகக் கூடிய வகையிலும் இந்த இடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஓர் இரவு தங்குவதற்கு ரூ.2000 (US$30) அல்லது ஒரு வாரத்திற்கு ரூ.10,500 (US$157) நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதில் காலை உணவும் உள்ளடங்கும். குறுங்கால அல்லது நீண்டகால விருந்தினர்களுக்கும் இந்த இடம் வழங்கப்படும். முற்பதிவு செய்து கொள்வதற்கு ஆசிரம முகாமையாளர் திரு. வினோத் அவர்களை தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: (91)- 98 456 61 221 vinod@babajiskriyayoga.net



பெங்களூர் ஆசிரமத்தின் தற்போதைய புதிய விருந்தினர் இல்லத்தின் முகப்புத்தோற்றம்